**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**உயர் கல்வி பிரிவு**

# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிறுவுதல்

அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தினால் வழங்கப்பட்ட கடன் உதவியின் கீழ் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின், உயர் கல்வி பிரிவு மூலம் செயற்படுத்தப்படும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிறுவும் திட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள பதவிக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2019.03.05 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திட்ட முகாமைத்துவ பிரிவு ஒன்றாக இந்தத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முழு பெறுமதி 10 மில்லியன் குவைட் டினார்களாகும்.

| பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவு |
|---|---|---|
| திட்டப் பணிப்பாளர் | 1 | PS 1 |

மேலுள்ள பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு தேவையான அடிப்படை தகைமை மற்றும் பொதுவான நிபந்தனைகள் பின்வருமாறு.

**பதவிக்குத் தேவையான தகைமைகள்**

குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம்:

(1) குறித்த துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

குறித்த துறை தொடர்பிலான பட்டத்திற்கு நிகரானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று

அல்லது

அது சார்ந்த அங்கத்துவம்/ குறித்த துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அதற்கு இணையான தொழில் தகைமையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 5 ஆண்டு காலம் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) குறித்த துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

குறித்த துறை தொடர்பிலான பட்டத்திற்கு நிகரானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று

அல்லது

அது சார்ந்த அங்கத்துவம்/ குறித்த துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அதற்கு இணையான தொழில் தகைமையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

முழு/ பட்டய அங்கத்துவம் அல்லது குறித்த விடயப் பரப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அதற்கு இணையான முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அல்லது குறித்த விடயப் பரப்பு தொடர்பில் பெற்றுக்கொண்ட முதுமாணிப் பட்டம்

அத்துடன்

முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 08 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 4 ஆண்டு காலம் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(3) குறித்த துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

குறித்த துறை தொடர்பிலான பட்டத்திற்கு நிகரானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று

மற்றும்

குறித்த விடயப் பரப்பு தொடர்பில் பெற்றுக்கொண்ட முதுமாணி பட்டம்

அத்துடன்

முழு/ பட்டய அங்கத்துவம் அல்லது குறித்த விடயப் பரப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அதற்கு இணையான முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 06 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 3 ஆண்டு காலம் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு தொடர்புடைய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும்.
2. குவைட் அரசு அல்லது வெளிநாட்டு உதவி அடிப்படையில் செயற்படும் திட்டம் ஒன்றில் அனுபவம் விசேட தகைமையாக அமையும்.
3. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
4. வயது எல்லை: அதிக பட்ச வயது 64 அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
5. சம்பளம்:
   i. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2019.03.05 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.
   ii. செயல்திறன் அடிப்படையிலான வருடாந்த சம்பள உயர்வு
6. உத்தியோகபூர்வ வாகன உரித்து:

   01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் திட்டப் பணிப்பாளர் பதவிக்கு ஓட்டுநர் உடன் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றும், பெட்ரோல் வாகனத்திற்காக மாதாந்தம் 120 லீற்றர் எரிபொருள் அல்லது டீசல் வாகனத்திற்காக மாதாந்தம் 145 லீற்றர் எரிபொருள் உரித்தாகும். அவர் மாகாண நிர்வாகம்/ அரச கூட்டுத்தாபனம் சட்டரீதியான சபை/ முழுமையான அரசுக்குச் சொந்தமான நிறுவனம் உட்பட அரச சேவை/ மாகாண அரச சேவை தொடக்கம் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ பதவிக்கு தொடர்புடைய எரிபொருள் கொடுப்பனவு உரிமை பெறுவார்.
7. சேவை நிபந்தனை

   1 ஆண்டு காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் நியமனம் இடம்பெறும். ஓர் ஆண்டு கால செயல்திறன் மற்றும் சேவை தேவை அடிப்படையில் அந்தக் காலம் ஒவ்வொரு ஆண்டுக்காக மேலும் இரண்டு உச்ச காலம் வரை நீடிப்பு தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.
8. வேறு நன்மைகள்
   i. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பணியாளரிடம் இருந்து 8% பங்களிப்பும், தொழில் வழங்குநரிடம் இருந்து 12% பங்களிப்பும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்பை தொழில் வழங்குநரும் ஏற்பார்.
   ii. 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரித்தாகும் ஏனைய கொடுப்பனவுகள்.

தகைமைகள், அனுபவம் மற்றும் வேறு தொடர்புடைய விபரங்கள் தொடர்பில் முழுமையான விபரங்களை குறிப்பிட்டு விண்ணப்பதாரர் தொடர்பில் விபரங்களை கேட்டறிய முடியுமான உறவினர் அல்லது இருவரின் பெயருடன் நீங்கள் தயாரித்த விண்ணப்பத்தை 2026.02.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, உயர் கல்வி பிரிவு, இலக்கம் 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு - 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுவது அவசியமாகும்.

**தலைவர்**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**
**உயர் கல்வி பிரிவு**
**இலக்கம் 18, வோர்ட் பிளேஸ்**
**கொழும்பு - 7.**